



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், ஆலந்தூர் – திருப்பெரும்புதூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கழக செயற்குழு உறுப்பினர்கள் ஆலோசனை கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்துகொண்டு உரையாற்றினார். இக்கூட்டத்தில், தலைமைக் கழகத்தால் நியமிக்கப்பட்டுள்ள பிரதிநிதிகள் வழக்கறிஞர் என்.மருதுகணேஷ் அவர்களும் கழக மகளிர் அணி பிரச்சாரக்குழு செயலாளர் திருமதி. கே.ராணி வெங்கடேசன் அவர்களும் பங்கேற்று மேற்கொள்ள வேண்டிய கழகப் பணிகள் குறித்து விளக்கி கூறினார்கள்.

### காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் கழக மறுசீரமைப்பின் படி

# ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் - வட்ட - கிளைக் கழக அமைப்புக்களை பலப்படுத்துவீர்!

## மாவட்டச் செயற்குழு கூட்டத்தில் முடிவு என தா.மோ.அன்பரசன் தகவல்!

காஞ்சிபுரம், செப். 6-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் கழக மறுசீரமைப்பின் படி 6 சட்டமன்றத் தொகுதிகளில் அடங்கி உள்ள ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் - வட்ட - கிளைக் கழக அமைப்புக்களை பிரித்து உருவாக்கி கழகத்தை பலப்படுத்திடுவோம் என்று குன்றத்தூரில் நடைபெற்ற மாவட்டச் செயற்குழுக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று மாவட்டச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் கூறியுள்ளார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் குன்றத்தூர் அறிஞர் அண்ணா திருமண மண்டபத்தில் அவைத் தலைவர் த.துரைசாமி தலைமையில் நடைபெற்றது.

மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி, வரலட்சுமி மதுசூதனன், து.மூர்த்தி மற்றும் மாவட்ட கழகப் பொருளாளர் வெ.விசுவநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட செயலாளர் - முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தொடக்கத்தில் அனைவரையும் வரவேற்று பேசினார்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் கழக அமைப்புகளை சீரமைப்பு செய்வதற்காக தலைமைக் கழகத்தால் அனுப்பப்பட்டுள்ள பிரதிநிதிகள் வழக்கறிஞர் என். மருது கணேஷ், கழக மகளிர் அணி பிரச்சார குழு செயலாளர் ராணி ரவிச்சந்திரன் ஆகியோர் பங்கேற்று மேற்க்கொள்ள வேண்டிய கழகப்பணிகள் குறித்து விளக்கி உரையாற்றினார்கள்.

தலைமை தீர்மானக் குழு செயலாளர் மீ.அ. வைதியலிங்கம், பகுதி செயலாளர்கள் என்.சந்திரன், பி.குணாளன்,

ஒன்றியச் செயலாளர்கள் ந.கோபால், எஸ்.டி. கருணாநிதி, ஏ. வந்தேமாதரம், திருமுடிவாக்கம் இ.மணி, ஜி.கே.ரவி (எ) விவேகானந்தன், நகரச் செயலாளர்கள் டி.பாபு, எஸ்.ஜபருல்லா, கோ.சத்தியமூர்த்தி, ஆர்.சதீஷ்குமார்,

தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் அ.தமிழ்மாறன், கழக சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் சாய் ஜெயகாந்த் பாரதி,

தலைமைப் பொதுக் குழு உறுப்பினர்கள் எம். எஸ்.கே.இப்ராகிம், ஆர். டி. பூபாலன், கே.எத்திராஜ், எம்.ஆர்.சீனிவாசன், எஸ்,சதீஷ், மா. கணேஷ் பாபு, இரா.பாஸ்கரன்,

கழக அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் கோல்டு டி.பிரகாஷ், ஜா.செந்தில்தேவராஜ், பொன்.ரமேஷ்கவி, கே.ஆர்.ஆனந்தன், டி.எஸ். எம்.ஜெயகரன், தி.க.பாஸ்கரன், டி.ஆர்.சாரதி பெரியநாயகம், பெப்சி கண்ணன், எம்.ஆர்.கதிரவன், ஆர்.ஆர்.ஜெயராம்மார்த்தாண்டம், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்துக் கொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:-

பேரறிஞர் அண்ணா அவர்கள் உருவாக்கிய - முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வளரத்தெடுத்து இன்றைக்கு பவள விழா கண்டு நூற்றாண்டை நோக்கி நடைபோடும் வரலாற்று சிறப்பு மிக்க இயக்கமான நம் திராவிட முன்னேற்றக் கழகத்தை இன்றும் வலிமை கொண்ட இயக்கமாக வளர்த்தெடுப்போம் என்று நம்முடைய உயிரினும் மேலான அன்புத்தலைவர் என்றும் நம் இதயங்களின் முதல்வர் தளபதி அவர்கள் தலைமைச் செயற்குழு கூட்டத்தில் உணரச்சி பொங்க உறுதியேற்றபடி,

கழகம்புத்தெழுச்சியைப் பெற - அடுத்த கட்டப் பயணத்தில் வெற்றிகளை அடைய - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால் அமைக்கப்பட்டகழக மறுசீரமைப்புக் குழுவின் பரிந்தரைகளின்படி

வருவாய் மாவட்டங்களை அடிப்படையாக கொண்டு இரண்டு சட்டமன்றத் தொகுதிகளுக்கு ஒரு கழக மாவட்டம் என்ற வகையில் தற்போது உள்ள காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்றத் தொகுதிகளை பிரித்து,

காஞ்சிபுரம் வருவாய் மாவட்டத்தில் உள்ள 28.ஆலந்தூர், 29. திருப்பெரும்புதூர் ஆகிய 2 சட்டமன்றத் தொகுதிகளை உள்ளடக்கி காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் என்றும்,

செங்கல்பட்டு வருவாய் மாவட்டத்தில் உள்ள 30.பல்லாவரம், 31. தாம்பரம் ஆகிய 2 சட்டமன்றத் தொகுதிகளை உள்ளடக்கி செங்கல்பட்டு வடக்கு மாவட்டம் என்றும் செங்கல்பட்டு மேற்கு மாவட்டத்தில் 32.செங்கல்பட்டு, மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதியையும், செங்கல்பட்டு கிழக்கு மாவட்டத்தில் 33.திருப்போரூர், செய்யூர் சட்டமன்றத் தொகுதியையும் இணைத்து புதிய கழக மாவட்டங்களை உருவாக்கி தந்த தோடு

ஒவ்வொரு கழக ஒன்றியமும் சராசரியாக 30,000 வாக்குகளைக் கொண்டும் ஒவ்வொரு நகர கழகமும் சராசரியாக 40,000 வாக்குகளைக் கொண்டும், சென்னை மாநகராட்சி ஆலந்தூர் பகுதிக் கழகங்கள் 40,000 வாக்குகளைக் கொண்டும், சென்னை மாநகர ஆலந்தூர் பகுதி வட்டக் கழகங்கள் 10,000 வாக்குகளைக் கொண்டும் அமைந்திட வேண்டும் என்றும் அறிவித்துள்ள நம்முடைய உயிரினும் மேலான அன்புத்தலைவர் தளபதி மு.க.ஸ்டலின் அவர்களின் அன்புக் கட்டளையை ஏற்று புதிதாக அமைக்கப்பட்டுள்ள காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள 28.ஆலந்தூர், 29. திருப்பெரும்புதூர் ஆகிய 2 சட்டமன்றத் தொகுதிகளில்

தலைமைக் கழகத்தால் அனுப்பப்பட்டுள்ள பிரதிநிதிகள் வழக்கறிஞர் என். மருது கணேஷ், திருமதி. ராணி ரவிச்சந்திரன் ஆகியோரின் நல் வழிகாட்டுதல்களின் படி

ஒன்றிய - நகர - பகுதி - பேரூர், வட்ட - கிளைக் கழக அமைப்புகளை 10 நாட்கள் என்ற காலவரையறைக்குள் உருவாக்கிட வேண்டும் என்று இச்செயற்குழுக் கூட்டம் ஏகமனதாக முடிவெடுக்கிறது.

அத்துடன் புதிதாக அமைய உள்ள காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள கழகத்தினர் அனைவரும் ஒருங்கிணைந்து ஒற்றுமையாக செயல்பட்டு, தட்டு தடுமாறி ஆட்சிக்கு வந்துள்ள இந்த தறிகெட்ட தற்குறி ஆட்சியை அகற்றிவிட்டு திக்கெட்டும் போற்றி பாராட்டிய திராவிட மாடல் ஆட்சியை, நம்முடைய முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களை மீண்டும் தமிழக முதல்வராக அரியணையில் அமர்த்தும் வரை அயராது பாடு படுவோம் என்றும் உறுதியேற்ப்போம் என்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக ஒருமனதாக தீர்மானிக்கிறது.

வரலாற்றுப் பெருமை வாய்ந்த காஞ்சிபுரம் மண்ணில் பிறந்து தனது அடுக்கு மொழி பேச்சாற்றலாலும் - எழுத்தாற்றலாலும் - அறிவாற்றலாலும் தமிழக மக்களை கவர்ந்த மாபெரும் அரசியல் தலைவர் - நம்மை எல்லாம் ஆளாக்கிய “காஞ்சி தந்த காவியத் தலைவன், “தென்னாட்டு காந்தி,“இந்நாட்டு இங்கர்சால், என்று அனைவராலும் போற்றி புகழப்படும் அரசியல் மாமேதை, எந்நாளும் பொது வாழ்வில் எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்று உறுதியோடு இறுதி நாள் வரை வாழ்ந்து மறைந்தும் மறையாமல் நம் இதயங்களில் வாழ்கின்ற காஞ்சித் தலைவன் பேரறிஞர் அண்ணா அவர்களின் 118-வது பிறந்த நாளான வருகிற செப்டம்பர் 15-ஆம் தேதியன்று காலை 9.00 மணிக்கெல்லாம்,

நம்முடைய காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள மாநகர - பகுதி - ஒன்றிய - நகர - பேரூர்களில் கிளை - வார்டுகளில் கழக கொடி ஏற்றியும் அந்தந்த பகுதியில் கழக கொடி தோரணங்கள் கட்டி, ஒலிபெருக்கி அமைத்து கழக பாடலை ஒலிபரப்பு செய்து, அதன் அருகே அறிஞர் அண்ணாவின் திருஉருவப் படத்தினை அலங்கரித்துவைத்தும், சக்கரை பொங்கல் - இனிப்பு வழங்கியும் வழக்கம் போல மிகவும் எழுச்சியுடன் பேரறிஞர் அண்ணா அவர்களின் 118-வது பிறந்தநாள் விழாவை மாவட்டம் முழுவதும் மிகச்சிறப்பான முறையில் கொண்டாடுவது என்றும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகம் ஒருமனதாக தீர்மானிக்கிறது.

2026 - தி.மு.க. முப்பெரும் விழா மற்றும் விருது வழங்கும் விழா நம்முடைய உயிரினும் மேலான கழகத் தலைவர் என்றும் நம் இதயங்களில் முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் வருகிற 15.9.2026 செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணியளவில் சென்னை அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கத்தில் நடைபெறுகிறது.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், கழக நாடாளுமன்ற - சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் கழக செயலாளர்கள், கழக அணிகளின் நிர்வாகிகள் - உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் மற்றும் நிர்வாகிகள் சென்னையில் நடைபெறும் கழக முப்பெரும் விழாவில் கலந்து கொண்டு சிறப்பிப்பது என காஞ்சிபுரம் வடக்கு தி.மு.க. ஒருமனதாக முடிவெடுக்கிறது.

தந்தை பெரியார் பிறந்தநாளை சமூக நீதி நாளாக கனடபிடிக்க வேண்டும் என்றும் அத்துடன் உறுதி மொழியும்ஏற்றிட வேண்டும், நம்முடைய நெஞ்சம் நிறைந்த அன்புத் தலைவர் தளபதி அவர்கள் அறிவித்துள்ளபடி, தந்தை பெரியார் 148-வது பிறந்த நாளான செப்டம்பர் 17-ஆம் தேதி அன்று காலை 9.00 மணியளவில்,

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள பகுதி - ஒன்றிய - நகர - பேரூர்களில் கிளை - வார்டுகளில் உள்ள தந்தை பெரியார் திருவுருவச் சிலைக்கும், ஆங்காங்கு தந்தை பெரியார் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தி சமூக நீதிநாளாக கடைபிடித்து கழகத்தினர் அனவைரும் உறுதி மொழி ஏற்று தந்தை பெரியாருக்கு பெருமை சேர்ப்பது என்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகம் ஏகமனதாக முடிவெடுக்கிறது.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.



# தி.மு.க. இளைஞர் அணி



### தி.மு.க. இளைஞர் அணி அறக்கட்டளை சார்பில், கல்வி, மருத்துவ உதவித்தொகை மற்றும் பொற்கிழியாகப் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 25 பேருக்கு

கழக இளைஞர் அணிச் செயலாளர் – மாண்புமிகு தமிழ்நாடு எதிர்க்கட்சித் தலைவர்

**உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் ரூ.6,25,000/– வழங்கினார்.

கழகத் தலைவர் அவர்களது வழிகாட்டுதலின்படி, தி.மு.க. இளைஞர் அணி அறக்கட்டளையில் இருந்து, கழகத்தினர் மற்றும் பொதுமக்களுக்கு கல்வி, மருத்துவ உதவிகள் மற்றும் கழக முன்னோடிகளுக்கான பொற்கிழியாக, ஒவ்வொருவருக்கும் தலா ரூ.25ஆயிரம் நிதி உதவியாக வழங்கப்பட்டுவருகிறது.

பொதுமக்கள் வழங்கும் மனுக்கள் மற்றும் மாவட்டக் கழகச் செயலாளர், இளைஞர் அணி நிர்வாகிகளின் பரிந்துரையுடன் வரும் கோரிக்கை மனுக்களை ஆய்வுசெய்து, இந்த நிதி உதவிகளை வழங்கிவருகிறார், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள்.

அந்த வகையில், செப்டம்பர் மாதத்தில் நிதி உதவிகளைப் பெறும் 25 பயனாளிகளின் விவரம் வருமாறு :

| வ. எண் | பெயர், முகவரி |
|---|---|
| 1. | பா.ஹரீஸ்வரன், த/பெ பார்த்தசாரதி, 2/380/1, எம்.ஜி.ஆர்.நகர், பிரதான சாலை, டி.சவேரியார்புரம், தூத்துக்குடி – 628 002 |
| 2. | சு.ஏழுமலை, த/பெ சுப்பிரமணி, 2/117, கர்லம்பாக்கம், பள்ளிப்பட்டு, திருவள்ளூர் – 631 202 |
| 3. | தி.முல்லைவேந்தன், த/பெ திருமுருகன், 192, தெற்குத் தெரு, செம்படாக்குறிச்சி, வெங்கடாம்பேட்டை, சங்கராபுரம், கள்ளக்குறிச்சி – 606 207. |
| 4. | ச.பாலசுகுமாரன், த/பெ சக்திவேல், 13/8, தெற்குத் தெரு, கொக்கரசன்கோட்டை, கடலாடி, இராமநாதபுரம் – 623 115 |
| 5. | செ.சந்தோஷ்குமார், த/பெ செந்தில், 93, ஆசாரி தெரு, பெரியநெசலூர், வேப்பூர், கடலூர் – 606 304 |
| 6. | சு.சிவரஞ்சினி, க/பெ சுப்பிரமணியன், 28/34, கள்ளிப்பாலம் சாலை, கிருஷ்ணா நகர், காசிபாளையம், ஈரோடு – 638 454 |
| 7. | சி.மாணிக்கம், த/பெ சின்னையா, 47, இராதாகிருஷ்ணன் சாலை, மயிலாப்பூர், சென்னை – 600 004 |
| 8. | பா.பழனியம்மாள், த/பெ பாலசுப்பிரமணி, 1, எம்.எஸ்.நகர், கொங்கு பிரதான சாலை, பள்ளிவாசல் தெரு, திருப்பூர் – 641 607 |
| 9. | ஏ.ராஜ்குமார், த/பெ ஏகாம்பரம், 1246, சின்னஓபுளாபுரம், பெரியஓபுளாபுரம், கும்மிடிப்பூண்டி, திருவள்ளூர் – 601 201 |
| 10. | க.வடிவேல், த/பெ கணபதி, 4/316, சம்படி தெரு, சேகல், திருமருகல், நாகப்பட்டினம் – 609 702 |
| 11. | சி.கவிமாறன், த/பெ சிவக்குமார், 99, கொண்டசாமி நாயுடு வீதி–1, வேலாண்டிபாளையம், கோயம்புத்தூர் – 641 025 |
| 12. | பா.அனுஶ்ரீ, த/பெ பாலமுருகன், 1/400, பெத்தேல் நகர், 4–வது குறுக்கு வீதி, ஈஞ்சம்பாக்கம், சென்னை – 600 115 |
| 13. | ரா.நவீன்குமார், த/பெ ராஜேந்திரன், 15, விநாயகர் கோயில் வீதி, பெரும்பேர்கண்டிகை, அச்சரப்பாக்கம், காஞ்சிபுரம் – 603 310 |
| 14. | ஜெ.அபிபிரியா, த/பெ ஜெஸ்டின், 100, இராஜவீதி, திருமனூர், வாழப்பாடி, சேலம் – 636 202 |
| 15. | அ.அழகர்சாமி, த/பெ அழகர், 25, பக்தசேவா தெரு, காந்தி நகர், போடிநாயக்கனூர், தேனி – 625 513 |
| 16. | ம.ஹரிஹரன், த/பெ மனோகரன், 3/62, சன்னதி தெரு, மரக்காணம், திண்டிவனம், விழுப்புரம் – 604 303 |
| 17. | ரா.சிவக்குமார், த/பெ ராமகிருஷ்ணன், 3/95, கங்கையம்மன் கோயில் தெரு, மேட்டுப்பாளையம், பூவிருந்தமல்லி, திருவள்ளூர் – 600 077 |
| 18. | இ.ஸ்டாலின், த/பெ இம்மானுவேல், 4, மல்லிகா நகர், பி.வி.வைத்தியலிங்கம் சாலை, பழைய பல்லாவரம், சென்னை – 600 043 |
| 19. | ஆ.நிவின் சாய், த/பெ ஆனந்த், 96, மேற்குத் தெரு, கருப்பட்டி, வாடிப்பட்டி, மதுரை – 625 205 |
| 20. | ஆ.ரினி, த/பெ ஆரோக்கியசாமி, 19, தாயுமானவர் தெரு, திருநகர், காட்பாடி, வேலூர் – 632 006 |
| 21. | பெ.சுஜித், த/பெ பெருமாள், 3/167–ஏ, மாந்தோப்பு குடியிருப்பு, அவினாசிப்பட்டி, மல்லசமுத்திரம், நாமக்கல் – 637 202 |
| 22. | சு.சந்துரு, த/பெ சுப்புராம், 144, பூம்புகார் மேற்கு, பல்லடம் சாலை, திருப்பூர் – 641 604 |
| 23. | சு.குமாரசாமி, த/பெ சுப்பிரமணியன், 4, குட்டையப்பிள்ளை தெரு, திருப்பரங்குன்றம், மதுரை – 602 005 |
| 24. | மு.குமரேசன், த/பெ முனுசாமி, 7, 2–வது தெரு, குயப்பேட்டை, போரூர், சென்னை – 600 116 |
| 25. | ரா.பிரவீன்குமார், த/பெ ராஜேந்திரன், 506, வடக்குத் தெரு, கீழ்மாம்பட்டு, பண்ருட்டி, கடலூர் – 607 106 |

அன்பகம்
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 05.09.2026

கலைஞர் 100 1924 - 2023

### தென்காசி மாவட்டத்தில் டெங்கு காய்ச்சலை தடுக்க

# முகாம்கள் அமைத்து தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## சட்டப்பேரவையில் ஈ.ராஜா வலியுறுத்தல்!

சென்னை, செப்.6-

தென்காசி மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் பரவலைத் தடுத்திட அரசு முகாம்கள் அமைத்து, தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சட்டப் பேரவையில் கழக உறுப்பினர் ஈ.ராஜா வலியுறுத்தினார். சட்டப்பேரவையில் அவர் பேசியதாவது:

தென்காசி மாவட்டத்தில், டெங்கு காய்ச்சல் பாதிப்பால் தொடர்ச்சியாக, கடையநல்லூர், சங்கரன் கோவில் இப்போது வாசுதேவநல்லூரிலும் இறப்பு ஏற்பட்டு இருக்கிறது.

சிவகிரி தாலுகா, விஸ்வநாதபேரி ஊராட்சியைச் சேர்ந்த திருமதி கிருஷ்ண குமாரி என்பவர் நேற்று இறந்திருக்கிறார். அதைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு தீவிர நடவடிக்கை எடுக்க



வேண்டும். முகாம்கள் அமைக்க வேண்டும்.

கொசு ஒழிப்பு பணியாளர்களெல்லாம் நம்முடைய வீட்டிற்கு வரும்போது, பொதுமக்களும் அவர்களுக்கு போதிய ஒத்துழைப்பு கொடுத்து, அவர்களை வீட்டைப் பார்வையிட செய்து, அவர்கள் கண்களுக்குத் தெரியாத சில இடங்களில் எங்கெங்கெல்லாம் தண்ணீர் தேங்கி இருக்கிறதோ அதையெல்லாம் அப்புறப்படுத்தி, அதோடு கொசு மருந்து, வீட்டிற்குள்ளே யும் கொசு மருந்து அடிக்க வேண்டிய தேவை இருக்கிறது. ஏனென்றால், பகலில் கடிக்கின்ற கொசுவால்தான் அது ஏற்படுகிறது. அதற்கான முயற்சிகளை யும் நாம் அனைவரும் சேர்ந்து ஒரு கூட்டு முயற்சியாக அந்த டெங்குவை நாம் கட்டுப்படுத்துவோம்.

வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதி என்பது மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் உள்ளது. அங்குள்ள பகுதியில் அதிகமாக ஆடு, மாடுகளை மேய்ச்சலுக்காக அழைத்து செல்வது வழக்கம். ஆனால், தற்போது பசுமை தீர்ப்பாயம் ஒரு கிலோ மீட்டருக்கு. . .

பயன்படுத்தக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், நம்முடைய கால்நடைத் துறை அமைச்சர் அவர்களும், வனத் துறை அமைச்சர் அவர்களும் கலந்துபேசி, அங்கு மேய்ச்சல் புறம்போக்கு களில் ஆடு, மாடுகளை மேய்ப்பதற்கு அனுமதி பெற்று தர வேண்டும்.

வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வீரசிகாமணி பகுதியில் கால்நடை மருத்துவ மனை அமைத்துத் தர இயலுமா? என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

இவ்வாறு அவர் பேசினார்.